## திருக்குறள்



திருவள்ளுவர்

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

அதிகாரம் - 1 - கடவுள் வாழ்த்து

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# ஏப்ரல் செய்திமடல்

( பங்குனி - சித்திரை )

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளின் வழிப் பிறக்கும் தீய ஆசைகளை அழித்து கடவுளின் பொய்யற்ற ஒழுக்க வழியிலே நின்றவர் நெடுங்காலம் வாழ்வார்

Long life is theirs who tread the path of Him Who conquered the five senses.

## பள்ளியின் அறிவிப்புகள் !!

1. புகைப்பட நாள்:
புகைப்பட நாள் வெற்றிகரமாக முடிந்தது, மற்றும் புகைப்படங்கள் இவ்வருட பள்ளியின் ஆண்டு புத்தகத்தில் இடம்பெறும்.

2. வருடாந்திர நாள் போட்டிகள் (மே 3 2025):
ஆண்டுநாள் போட்டிகளுக்கானத் தன்னார்வ குழு அமைக்கப்பட்டு, பல்வேறு போட்டிகளுக்கானத் தயாரிப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. குழந்தைகளைப் பங்கேற்க ஊக்கப்படுத்தவும், ஏப்ரல் 20ஆம் தேதிக்குள் பதிவு செய்யுமாறு பெற்றோர்களைக் கேட்டுக்கொள்கிறோம். பதிவு வலைப்பக்கம் - https://www.ritamilschool.org/anncomp2025/

3. பொது உறுப்பினர் கூட்டம்:
மே 3ஆம் தேதி நடைபெறவுள்ள பொது உறுப்பினர் கூட்டத்திற்கான திட்டம் மற்றும் முன்மொழியப்பட்ட சட்ட மாற்றங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் குறைந்தது 15 நாட்களுக்கு முன்பாக பகிரப்படும்.

## பள்ளி அட்டவணை ஏப்ரல் மாதம்

April 25

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |
| | | | | | | |

RITamilSchool Calendar

## வார்த்தை ஜாலம்!

1. ரநமாம்க
2. ம்தோந்பூடட்
3. லம்திங்மிக
4. றைற்ககுடதி
5. ன்ரம்சாமி

## கதை படிப்போம் !

### சிங்கமும் சிலையும்



ஒரு நாள் ராமு தன்னுடைய செல்லபிராணியாக வளர்த்த சிங்கத்தை அழைத்துக் கொண்டு காட்டுப் பகுதிக்கு தேன் எடுப்பதற்காகச் சென்று கொண்டிருந்தான். செல்லும் வழியில் தங்களில் யார் அதிக வீரமுள்ளவர்கள் என்பதைப் பற்றி சிங்கமும் ராமுவும் பேசிக்கொண்டு சென்றனர். அப்போது செல்லும் வழியில், "ஒரு மனிதன் சிங்கத்தைக் கீழே தள்ளி அதன் மீது நிற்பதைப்போல" ஒரு சிலை இருந்தது. அதைப் பார்த்தாயா? யாருக்கு அதிக வீரம் இருக்கிறது என்பது இதிலே தெரிகிறது." என்றான் ராமு. "ஓ, அது மனிதன் செய்த சிலை. ஒரு சிங்கம் அந்த சிலை செய்திருந்தால், மனிதனைக் கீழே தள்ளி அவன் மீது, தான் நிற்பது போலச் செய்திருக்கும்." என்று சொல்லியது சிங்கம்.

நீதி: தனக்கென்றால் தனி வழக்கு தான்.

## மாணவர்களின் கைவண்ணம் !



சஞ்ஜித்கிருஷ்ணா சுப்பிரமணியன்

நிலை - 2

தன்னம்பிக்கைக் கொண்ட மனிதன்; மற்றவர்களின் நம்பிக்கையைப் பெறுகிறான்.

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# ஏப்ரல் செய்திமடல்

(பங்குனி - சித்திரை)

He who has self-confidence easily gains the trust of others.

## முத்தமிழ்முத்துக்கள்

### பறையாட்டம்



பறை ஒரு தமிழிசைக் கருவியாகும். இது தோலால் ஆன மேளமாகும். 'பறை' என்ற சொல் பேச்சைக் குறிப்பதாகும். பறையாட்டம் தமிழர்களின் பாரம்பரியமான நடனமாகும். பறையாட்டம் உணர்ச்சி மிக்கது மற்றும் எழுச்சி மிக்கது.

ஆதி மனிதசமூகம் தங்களின் கூடுதலுக்காகவும், தங்கள் குழுவிற்கு ஆபத்துகளை உணர்த்தவும், விலங்குகளிடமிருந்து தங்களை தற்காத்துக் கொள்ளவும் எழுப்பிக்கொண்ட சத்தம் தான் பறையாட்டத்தின் மூலம் என கருதப்படுகிறது. ஆவேசம், மகிழ்ச்சி, உற்சாகமென உணர்ச்சிகளை எழுப்பி கேட்பவரை ஒரே நேர்க்கோட்டில் இணைக்கும் சக்தி வாய்ந்தது. பறை, ஓர் இசைக் கருவி மட்டுமல்ல தோலிசைக் கருவிகளின் தாய்.

## நினைவு நாளேடு

### அம்பேத்கர் தினம்:

அம்பேத்கர் தினம் என்பது ஆண்டுதோறும் ஏப்ரல் 14 ஆம் தேதி கொண்டாடப்படும். இது இந்தியாவின் முக்கிய சட்ட வல்லுநர், பொருளாதார நிபுணர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் அரசியல் தலைவரான டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் பிறந்த நாளை நினைவுக்கூரும் நாளாகும்.

இந்தியாவில் சமூக சமத்துவமின்மைக்கு எதிரானப் போராட்டத்தில் அவரே முதன்மையானவர், மேலும் அவர் "இந்திய அரசியலமைப்பின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார். இந்திய சமூகத்திற்கு டாக்டர் அம்பேத்கரின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை, குறிப்பாக இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதில் அவரது பணிகளை இந்த நாள் கௌரவிக்கிறது.

## ஏப்ரல் மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :

- அஸ்விதா சசின்குமார்
- அஷனா ஆனந்த்
- ஆண்ட்ரியா ரமேஷ்
- சபரீஸ்வர் சுப்ரமணியன்
- சித்தார்த் வங்கரி
- வர்ணிகா ரியான் அருண் பிரபாகர்




ஏப்ரல் மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும் நம் பள்ளி செல்வங்களுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

## ஆசிரியர்கள் படைப்பு

### தமிழ் மொழிபெயர்ப்பு குறுக்கெழுத்துப் புதிர் !

குறுக்காக:
2 - Blueberry
4 - Fig
6- Cauliflower
8 - Snake Gourd
10 - Radish
12 - Eggplant
14 - Avocado
16 - Apple
18 - Mushroom
20 - Peas
21 - Chikoo
22 - Pumpkin

கீழ்:
1 - Coriander
2 - Flat beans
3 - Beet root
5 - Ash Gourd
7 - Pear
9 - Plantain Stem
11- Papaya
13 - Onion
15 - Durian



செங்கேனி கவிதா
-மழலை ஆசிரியை

## மார்ச் மாதத்தின் விடைகள் :

### குறுக்கெழுத்துப்போட்டி

1 . பத்து
2. படம்
3. கடிகாரம்
5. ரகசியம்
7. தன்னம்பிக்கை
9. குதி

2. பந்து
4. சிங்கம்
6. காகம்
8. தென்னைமரம்
10. சிவப்பு
11. திட்டம்
12. விளக்கு

### வார்த்தை ஜாலம்!

1.சதுரங்கம்
2.காகிதகப்பல்
3.குறும்புத்தனம்
4.கேள்விக்குறி

உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:
கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை 15-ஆம் தேதிக்குள் NEWSLETTER.RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இணையதளம்: HTTPS://WWW.RITAMILSCHOOL.ORG/
முகநூல்: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL